**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8093664

1. District : மாவட்டம் திருப்பூர். PS: காவல்நிலையம் ஊ.த.க.பிரிவு Year: ஆண்டு 2020 FIR No.: மு.த.அ. எண் 1/2020/AC/TPR Date: நாள் 25.02.2020

2. (i) Act சட்டம்: Pc Act 1988 as amended Sections பிரிவுகள்: 7
   (ii) Act சட்டம்: by PC [Amendment] Act 2018 Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் Date to : நாள் வரை 07.02.2020 at 11.45 hrs. after
   Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 25.02.2020 Time : நேரம் 10.30 hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் VOL.1 Time : நேரம் 10.30 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய்-மொழியாக எழுத்து மூலமாக.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 20 கி.மீ. தென் மேற்கு.
   Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் நிலையம், பல்லடம், திருப்பூர் மாவட்டம்.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் D. கார்த்திகேயன் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் தேவராஜ்.
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 32 yrs (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் -
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் - Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் (g) Address : முகவரி 1/11, வெலம்பநாயக்கன் தோட்டம், பாப்பம்பட்டி - PO, கோயமுத்தூர் மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   நாகையன், நிலைய அலுவலர், தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் நிலையம், பல்லடம், திருப்பூர் மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது:

இத்துடன் தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

R. [signature] 25/02/2020

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

D. [signature] 25/02/2020

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
25.02.2020

Name: பெயர் R. ராஜேஸ்வரி
Rank: நிலை ..........................No. எண் ..........
காவல் ஆய்வாளர்,
அ.த.க. பிரிவு, திருப்பூர்.

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது. கனம் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி, தலைமைக் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்பூர் அவர்கள் முன்பாக.

திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 1/2020/AC/TPR வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி...

திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் R.எழிலரசி ஆகிய நான் 25.02.2020-ம் தேதி 10.30 மணியளவில் அலுவலகத்தில் ஆஜரில் இருந்த போது D.கார்த்திகேயன், த/பெ. தேவராஜ்,1/11, வேலப்பநாயக்கன் தோட்டம், பாப்பம்பட்டி PO, கோயமுத்தூர் என்பவர் திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் ஆஜராகி எழுத்து மூலமாக கொடுத்த புகாரின் விபரம் பின்வருமாறு; அனுப்புநர்:D.கார்த்திகேயன், வயது-32, த/பெ. தேவராஜ், 1/11, வேலப்பநாயக்கன் தோட்டம், பாப்பம்பட்டி -PO, கோயமுத்தூர். பெறுநர்:காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருப்பூர்.அய்யா, நான் மேற்கண்ட முகவரியில் எனது மனைவி காயத்ரிஸ்ரீ மற்றும் மகள் ராகவி மற்றும் பெற்றோர்களுடன் வசித்து வருகின்றேன். நான் MBA.,படித்துள்ளேன். எனது மனைவியின் சொந்த ஊர் திருப்பூர் மாவட்டம், அக்ரஹாரபுத்தூர் ஆகும். எனது மாமனார் பாலகிருஷ்ணன் அவர்களுக்கு திருப்பூர் மாவட்டம், பல்லடம் தாலூக்கா, பூமலூர் கிராமத்தில், க.ச.எண்.84 மற்றும் 85-ல் மொத்தம் சுமார் 3.33 ஏக்கர் பூமி உள்ளது. நான் இந்த பூமியில் சுமார் 1225 சதுர மீட்டரில் பெட்ரோல் பங்க் வைத்து தொழில் செய்வது என முடிவு செய்து கடந்த 23.12.2018-ம் தேதி Bharath Petroleum Corporation Limited., (BPCL) நிறுவனத்திற்கு இணையதளம் மூலம் உரிய ஆவணங்களுடன் விண்ணபித்தேன். அதே தேதியில் மேற்படி இடத்திற்கு நோட்டரி வழக்கறிஞர் மூலம் குத்தகைக்கு எழுதி வாங்கினேன். அதன் பேரில் Bharath Petroleum Corporation Limited., (BPCL) நிறுவனத்தினர் மங்களம் - பல்லடம் சாலையில் உள்ள மேற்படி இடத்தை எனது பெயரில் டீலர்சிப் வாங்குவதற்கு letter of indent 13.01.2020-ம் தேதி வழங்கினார்கள். பெட்ரோல் பங்க் வைப்பதற்கு சம்பந்தபட்ட துறையினரிடமிருந்து தடையின்மை சான்று பெறுவற்காக திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு BPCL நிறுவனத்தினர் கடிதத்தை என் மூலம் கொடுத்து அனுப்பினார்கள். நானும் திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் சென்று மாவட்ட வருவாய் அலுவலர் அலுவலகத்தில் இது சம்பந்தமாக பணிகளை கவனிக்கும்

அலுவலகத்தில் கொடுத்தேன். பின்னர் பல்லடம், தீயணைப்பு நிலைய அலுவலகத்தில் இருந்து 07.02.2020-ம் தேதி காலை சுமார் 11.45 மணியளவில் எனது செல்போன் நெம்பருக்கு தொடர்பு கொண்டு Spot inspection-க்கு உடனே வருவதாக ஒரு நபர் கூறினார். அதன் பேரில் உடனே நான் பெட்ரோல் பங்க் வைக்கப்போகும் இடத்திற்கு போனேன். பிறகு மதியம் பல்லடம் தீயணைப்பு துறை நிலைய அலுவலர் ராகவன் மற்றும் இருவர்கள் வந்து இடத்தை ஆய்வுசெய்தார்கள். அங்கேயே நிலைய அலுவலர் ராகவன் அவர்கள் என்னிடம் தடையின்மை சான்று வழங்க பரிந்துரை செய்ய பொதுவாக பெட்ரோல் பங்கிற்கு ரூ.50,000/- வாங்குவது வழக்கம் நீங்கள் ரூ.30,000/- கொடுத்தால் போதும் என்றும் இன்றே கொடுத்தால் உடனே நான் பரிந்துரை செய்து அனுப்பிவைப்பதாகவும் கூறினார். நான் பணம் தற்சமயம் என்னிடம் இல்லை என்று கூறினேன். அதற்கு நிலைய அலுவலர் ராகவன் பணத்தை தயார் செய்துவிட்டு வருமாறு கூறினார். அதன் பிறகு ராகவன் 12.02.2020-ம் தேதி சுமார் 11.00 மணியளவில் செல்போன் நெம்பர் 7010946969 என்ற எண்ணிலிருந்து எனது செல் நெம்பர் 9361648881 என்ற எண்ணிற்க்கு தொடர்பு கொண்டு ஏன் இன்னும் வரவில்லை என்றும் அலுவலகம் வந்து தன்னை பார்க்குமாறு கூறினார். பிறகு 18.02.2020-ம் தேதி பல்லடம் நிலைய அலுவலர் ராகவன் அவர்கள் மீண்டும் எனது செல் போனிற்கு தொடர்பு கொண்டு தன்னை வந்து பார்க்குமாறும் தாமதித்தால் விண்ணப்பத்தை பரிந்துரை செய்யமாட்டேன் என்றும் கூறினார். அதன் பிறகு நான் நேற்று (24.02.2020)-ம் தேதி காலை சுமார் 11.45 மணியளவில் பல்லடம் தீயணைப்பு நிலையத்திற்கு சென்று நிலைய அலுவலர் ராகவன் அவர்களை சந்தித்து தடையிண்மை சான்று தொடர்பாக கேட்டதற்கு ராகவன் தான் கேட்டபணம் என்னாச்சு என்று கேட்டார். அவ்வளவு பணம் ரெடி செய்வது சிரமம் என்றும் கூறினேன். அதற்கு அவர் ரூ.20,000/- தருமாறும் அதை இன்று மாலைக்குள் தன்னுடைய அலுவலகம் வந்து கொடுக்குமாறும் கூறினார். பிறகு நான் வந்துவிட்டேன். எனக்கு தீயணைப்பு துறையில் தடையின்மை சான்று வழங்க பரிந்துரை செய்ய நிலைய அலுவலர் ராகவனுக்கு லஞ்சமாக ரூ.20,000/- கொடுக்க விருப்பம் இல்லை. எனவே அவர் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். இப்படிக்கு, Sd/- xxxx (D.Karthikeyan). 25/02/2020. Sir, Received the complaint on 25.02.2020 at 10.30 hrs and conducted enquiry between 10.30 hrs and 11.00 hrs and registered a case

in Tiruppur V&AC Cr.No.1/2020/AC/TPR u/s 7 of PC Act 1988 as amended by 7 of PC (Amendment) Act 2018 at 11.00 hrs. Sd/- xxxx (R.Ezhilarasi). 25/02/20 Inspr. VAC, TPR.

Original FIR along with original written complaint of Tr.D.Karthikeyan, S/o. Devaraj, 1/11, Velappannaicken Thottam, Pappampatti (PO), Coimbatore is submitted to the Hon'ble Chief Judicial Magistrate cum Special Judge, Chief Judicial Magistrate Court, Tiruppur and a copy of FIR is submitted to the Director, Vigilance and Anti-Corruption, Chennai.

25/02/20

(R.Ezhilarasi),
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Tiruppur.